கூட்டுத்துறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துதல்

*வினா எண். 1091—திரு. பாபு ஜனார்த்தனன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு நிறுவனமான டிட்கோவும் அசோக் லேலண்ட் நிறுவனத்தாரும் சேர்ந்து கூட்டுத்துறையில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை புதுக்கோட்டையில் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் டிட்கோ மூலதனம் என்ன? அசோக் லேலண்ட் மூலதனம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) ஆம்;

(ஆ) இந்த திட்டத்தினுடைய மதிப்பீடு ஏறக்குறைய 15 கோடி ரூபாய்; சுமார் 500 பேருக்கு வேலை கிடைக்கும் விதத்தில் அசோக் லேலண்ட் நிறுவனமும் டிட்கோ நிறுவனமும் இணைந்து இந்த நிறுவனத்தை புதுக்கோட்டையிலே ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு தலைவரவர்களே, புதுக்கோட்டையிலே ஆரம்பிக்கப்படவிருக்கிற அந்த தொழிற்சாலைக்கு எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதுக்கோட்டையிலே வெகு விரைவில் அந்த தொழிற்சாலை துவங்கவேண்டுமென்று காட்டுகிற ஆர்வத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், இப்போது முடிவுகள் எடுத்த நிலையில் இருக்கிறது. நில ஆர்ஜித வேலை இன்னும் நடக்கவில்லை. வெகு விரைவில் அந்த பணிகள் முடிவுறும்.

சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான ஐ. ஏ. எஸ் பயிற்சி நிலையம்.

*வினா எண். 1092—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் நிலையத்தில் (P.E.T.C.) ஆண்டுக்கு எத்தனை மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?

(ஆ) முழு ஒதுக்கீடு நிரப்பப்படாமல் காலி இடங்கள் ஏற்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை *அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

[*172ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

1981 மே 13]

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலுள்ள தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஐ. ஏ. எஸ். பயிற்சி கொடுக்கும் பயிற்சி நிலையத்தில் கடந்த 14 ஆண்டுகளாக சேர்ந்த மாணவர்களின் அறிக்கையை கொடுத்திருக்கிறார்கள். கடந்த 14 ஆண்டு காலமாக அதனுடைய மொத்த அளவான 60 என்ற எண்ணிக்கை நிரப்பப்படாமலே இருந்து வருகிறது. இதற்கான காரணம் என்ன? அரசு இது பற்றி ஒருவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறதே, தாழ்த்தப்பட்ட மாணவர்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கு அதற்கான முயற்சியிலே அரசு இவ்வளவு 'அசால்ட்டாக' இருக்கிறதே, இந்த நிலை ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசைப் பொறுத்த வரையில் இத்தகைய மாணவர்களுடைய நன்மையைக் கருதி தான் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஆனால் இந்த பயிற்சி நிலையத்திற்கு மாணவர்களை தேர்வு செய்கிறபோது, மாணவர்களுடைய விண்ணப்பங்கள் போதுமான அளவிற்கு வராததின் காரணமாக முழு எண்ணிக்கையில் சேர்க்க முடியவில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் பொழுது போதுமான அளவிற்கு மாணவர்கள் வரவில்லை என்று இப்போது சொல்லியிருக்கிறார். ஆனால் கொடுத்திருக்கிற விவர அறிக்கையில் சுற்றுப்புற சுகாதார வசதிகள் போதியனவாக இல்லாததால் ஒவ்வொரு ஆண்டும் குறைவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். பதிலுக்கும், கொடுத்திருக்கிற அறிக்கைக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. தாழ்த்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த மாணவர்கள் இந்த ஐ.ஏ.எஸ். பயிற்சி பெற்று கலெக்டர்களாக வந்தால் அந்த சமுதாயத்திற்கு உதவி செய்வதற்கு வழியாக இருக்கும். தங்கிப் படிப்பதற்கு பயிற்சி இடங்கள் நல்ல முறையில் வைத்து, மாணவர்கள் பயிற்சி பெற அரசு முயற்சிகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த பயிற்சி நிலைய கட்டிடத்தைப் பொறுத்தவரை தற்போது அரசு இரண்டாயிரம் ரூபாய் மாத வாடகையாக தந்து வருகிறது. இந்த கட்டிடம் பழுதடைந்த நிலையில் இருக்கிற காரணத்தால், கட்டிட உரிமையாளர் அதற்குத் தேவையான வசதிகளை செய்து தருவதற்கு மறுத்திருப்பதன் காரணமாகவும், அரசு அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இது தவிர வேறு மாற்று வாடகை கட்டிடம் சென்னையில் கிடைக்காததால் இந்த கட்டிடத்தை விலைக்கு எடுத்து, அதில் இருக்கிற குறைகளை போக்குவதற்கு அரசு

முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இந்த தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நல்ல பதவியிலே வந்து, சமுதாயத்திற்கு தொண்டாற்றுகிற நிலைக்கு வரவேண்டுமென்று நல்ல நோக்கத்தோடு தான் இந்த அரசைப் பொறுத்தவரை முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன், சென்ற ஆண்டைப் பொறுத்தவரை 60 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; ஆனாலும் அவர்கள் சேர்கிற நிலை வந்த போது 53 பேர்கள் மட்டுமே சேர்ந்து ஜுன் 81-ல் நடக்கவிருக்கிற முதல்நிலை தேர்வுக்கு தற்போது பயின்று வருகிறார்கள்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது சொன்னார்கள். மாணவர்கள் சரியாக வரவில்லை என்று, ஆனால் இது சரியானது அல்ல. காரணம், ஒவ்வொரு ஆண்டு தேர்விலும் நான் 'டைரக்டர் ஆப் ஹரிஜன் வெல்பேர், மற்ற அதிகாரிகளை சந்தித்து பேசியிருக்கிறேன். மாணவர்கள் நிறைய வந்திருக்கிறார்கள். இடவசதி பற்றாக்குறை, பாத்ரூம் இல்லாத குறை, போதுமான மேசை, நாற்காலி இல்லாத நிலையில், அதிகாரிகள் தான் இவ்வளவுதான் எடுக்க முடியும் என்று எடுக்கிறார்களே, இது அரசுக்கு தெரியுமா என்பதோடு, நாம் மாதம் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் வீதம் வருஷத்திற்கு 24 ஆயிரம் வீதம் 14 வருஷங்கள் வாடகை கொடுத்து இருக்கிறோம். அதிக வாடகை கொடுக்கிறோம் ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு கட்டடத்தை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா? அதோடு மாணவர்கள் அதிகமாக வந்தார்கள், ஆனால் இடவசதிக் குறைவு என்ற காரணத்தினால் அந்த அதிகாரிகள் தான் குறைத்து எடுத்தார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா?

[முற்பகல் 10.30]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே கட்டடத்தைப் பொறுத்த வரையில் நல்ல வசதிகளோடு இல்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். அங்கே மாணவர்கள் வந்து தங்கி வசதியாகப் படிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே தான் அரசு அந்தக் கட்டடத்தை விலைக்கு வாங்கி ரிப்பேர் செய்து நல்ல முறையிலே மாணவர்களுக்கு செய்து தரவேண்டுமென்று முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. இடவசதியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சொன்னதைப் போன்று 60 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட போதிலும் சேர்த்துக் கொள்ளக் கூடிய காலம் வந்தபோது 53 பேர்கள் வந்தார்கள் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இடவசதி இல்லாத நிலைமையும் அதற்கு ஒரு காரணமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS